1982 செப்டம்பர் 10]

அதிக சர்க்கரை சத்துள்ள குறுகிய கால கரும்பு ரகம்.

* வினா எண் 46—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக சர்க்கரை சத்துள்ள குறுகிய கால கரும்பு ரகம் ஒன்றை (கோ.சி. 671) மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பயிரிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தெரியும்.

(ஆ) கோ.சி. 671 என்ற கரும்பு ரகம் தமிழக சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 1978–79-ம் ஆண்டு முதல் பயிரிடப்பட்டு வருகிறது.

1982-83 ஆம் ஆண்டில், இந்த ரகத்தை மேலும் அதிக அளவில் பயிரிடத் தகுந்த ஏற்பாடுகள் தமிழக சர்க்கரை ஆலைகள் எடுத்து வருகின்றன.

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, இந்த கோ. சி. 671 என்ற கரும்பு ரகம் 1981-82-ல் தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது? அதனுடைய சதவீத உற்பத்தி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1981-82-ல் 38,276 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. சதவீதத்தைப் பற்றிய விவரம் இல்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவரவர்களே, இந்தப் புதுரக கரும்பினால் ஏக்கருக்கு எத்தனை டன் உற்பத்தி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதன் மூலம் 12 சதவீதம் சர்க்கரை மீட்பு கிடைக்கிறது.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, இந்த புதியரக கரும்பான கோ. சி. 671 இரண்டு வருஷத்திற்கு மூன்று அறுவடைகள் செய்யலாம் என்று ஆராய்ச்சித் துறை தெரிவிக்கிறது. இந்த மூன்று வெட்டுகளிலும் 30 டன்னுக்கு மேல் உற்பத்தியாகின்ற கரும்பை மேலும் பெருக்க விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் ஊக்கமளிக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா? அதற்காக ஆராய்ச்சித் துறையும், அரசும் என்ன ஆலோசனை செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 செப்டம்பர் 10

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இதை அதிகம் பயிரிட வேண்டுமென்ற வகையில் சர்க்கரை ஆலைகள் முயற்சி எடுத்து வருகின்றன. நடவு மானியமாக 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை அளிக்கப்படுகிறது. இதைப்போல மற்ற கரும்பு ரகங்களும் பிரபலமாகி இருக்கின்றன. எல்லா ரகங்களின் உற்பத்தியையும் பெருக்க சர்க்கரை ஆலைகள் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு மானியம் அளித்து ஊக்குவித்து வருகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, அதிகமாக உற்பத்தியைத்தருகிற கரும்பு ரகங்களைப் பயிரிட வேண்டுமென்று அரசு சொல்கிறது. அதுபற்றி ஆராய்ச்சிகளை எல்லாம் அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே அக்ரீமென்ட் செய்யப்பட்டு, கரும்பு உற்பத்தி செய்த விவசாயிகளின் கரும்பை வெட்டாமல் விட்டிருக்கிறார்கள். இரண்டாவது, மூன்றாவது வெட்டுகள் விடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். வேலூர் சர்க்கரை ஆலையில் அப்படி செய்யவில்லை என்று புகார் வந்திருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி தகவல் இல்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்தப் புதிய ரக கரும்பு 38,276 ஏக்கரில் பயிரிடப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆலைவாரியாக பயிரிடப்பட்ட ஏக்கர் விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இதைப்போன்ற புதிய ரக கரும்பை அதிகமாக உற்பத்திச் செய்கிறபோது விவசாயிகளிடமிருந்து அதைப் பெற்று, அரைத்து சர்க்கரை யாக்குகின்ற வழிவகை எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறதா? கோவை மாவட்டத்தில் விளைகிற கரும்பை அரைக்க போதிய ஆலை இல்லை என்று சொல்லப்படுகிறதே. இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.